بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# jamaat ul sahih al islam – tamil nadu



ஹஸ்ரத் கலீ:பத்துல்லாஹ்
முனீர் அஹ்மது அஸீம் (அலை)

ஜுமுஆ பேருரை
தலைப்பு :

## துஆக்கள்
## (பிரார்த்தனைகள்)
## (பாகம் -4)

*31 July 2020*
(09 DHUL - HIJJAH 1441 AH)


வெளியீடு
அமீர்,
ஜமா அத் தமிழ்நாடு
*Phone No:- 917502272774*

## DUAHS (INVOCATIONS) (PART - 4)

### துஆக்கள் (பிரார்தனைகள்) பாகம் - 4

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.'.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.'.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜும்மா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

அல்லாஹ்வின் மாபெரும் கருணையால் இன்று துஆக்கன் என்ற விஷயத்தில எனது ஜும்ஆ பேருரையைத் தொடர்கிறேன்.

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் வெளிப்பாடுகள், தரிசனங்கள், கனவுகள் மற்றும் உள்ளுணர்வுகள் ஆகியவற்றால் என் தோழர்களின் நம்பிக்கையை பலப்படுத்தவும் அதன் மூலம் அவன் என் உண்மையை உறுதிப்படுத்தவும் செய்கின்றான். அது அவனுடைய கருணையினாலேயே ஆகும்.

அல்ஹம்துலில்லாஹ்! துஆக்கள் என்ற விஷயத்தல் நான் முன் வைத்து வரும் இந்த வெள்ளிக்கிழமை பேருரைகளின் கட்டமைப்பிற்குள் நின்று, எனது தோழர்களுக்கு துஆக்களின் மதிப்பைக் காண்பிப்பதற்கும், இந்நூற்றாண்டில் வெளிப்பட்டுவரும் தெய்வீக அடையாளங்கள் மீது அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் என் தோழர்களுக்கு பல வழிகளில் அல்லாஹ் தன்னை வெளிப்படுத்திவருகின்றான். துஆக்கள் என்ற தலைப்பில் 17 ஜுலை 2020 தேதியன்று நான் நிகழ்த்திய ஜுமா பேருரையை பயன்படுத்தி, தமிழ் நாட்டைச் சார்ந்த எனது அன்பிற்குரிய தோழர் நாயீப் அமீர் சலீம் சாஹிப் அவர்கள், 24 ஜுலை 2020 தேதி வெள்ளிக்கிழமையன்று ஜுமுஆ பேருரை வழங்கிக் கொண்டிருந்த போது ஒரு மிக முக்கியமான ஆன்மீக நிகழ்வு நடந்தது. அதாவது வெள்ளிக் கிழமை தொழுகையின்போது, சலீம் சாஹிப் அவர்களுக்கு பின்னால் நின்று கொண்டிருந்த கம்பீரமான ஒரு நபரை, அவரது மனைவி .'.பாத்திமா ஜாஸ்மின் சாஹிபா கஷ்.'.பில் கண்டார்கள். அந்நபர் தலையில் நிறைய முடிகளுடன் மிகவும் உயரமாக இருந்தார். ஜாஸ்மின் சாஹிபா அந்த நபரைப்

பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அக்காட்சியானது மிக இனிமையாக இருந்தது. அப்போது, அந்த நபரை நோக்கி நீ யார் என்று அவர்களுடைய ஆன்மா கேட்பதை அவர்கள் உணர்ந்தார்கள், அதற்கு அந்த நபர் பதிலளித்தார். நான் உங்கள் அனைவரையும் பாதுகாக்க அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு மலக்கு ஆவேன் ஃபாத்திமா ஜாஸ்மின் சாஹிபா அவர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியத்துடன் இருந்தபோது, அவரது மகன் அவரை உலுக்கி அழைத்தான். பின்னர் அந்த மலக்கு ஃபாத்திமா ஜாஸ்மின் சாஹிபா அவர்களுக்கு காட்சியளிக்கவில்லை. ஆனால் அதற்கு பிறகும் அந்த குரல் மீண்டும் ஒரு முறைக்கூட தன்னிடம் அதை சொல்வதை அவரகள் கேட்டார்கள். எனவே, அவர்கள் அனுபவித்ததெல்லாம் தனது கற்பனை அல்ல என்று அவர்களுக்கு உறுதியாகிவிட்டது. பின்னர் அவர்களுடைய பிள்ளைகளும் அந்த மலக்கைப் பார்த்ததாக தெரிவித்தனர். அல்ஹம்துலில்லாஹ்! இது அவர்களுக்கு கிடைத்த மிகப் பெரிய ஆன்மீக அனுபவம். மாஷா அல்லாஹ்! அல்லாஹு அக்பர்.

அல்லாஹ்வின் வாக்குறுதி எல்லா நிலையிலும் உண்மையாகும். அல்லாஹ்வின் மீதும், இந்த நூற்றாண்டின் அவனது கலீஃபத்துல்லாஹ் மீதும் வலுவான நம்பிக்கை கொண்ட எனது நேர்மையான தோழர்கள் அனைவருக்கும், அல்லாஹ் தனது பாதுகாப்பை வழங்குமாறு நான் எப்போதும் மன்றாடி துஆ செய்கிறேன். என் அன்பான தோழர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், அவர்களுக்கு தைரியம் அளிப்பதற்கும், கடினமான காலங்களில் அவர்கள் தங்கள் மனம் தளராமல் இருப்பதற்கும், மகிழ்ச்சியான தருணங்களில் இருந்தாலும் மகிழ்ச்சியற்ற தருணங்களில் இருந்தாலும் எல்லா நிலையிலும் அவர்கள் எப்போதும் அவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் மீண்டும் தொடர்ந்து அவர்களுக்கு தன்னை வெளிப்படுத்துவான்.

நம் உலகம் இப்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. என் இறைவா! நீ என்னிடம் வைத்திருக்கும் அன்பின் மூலமே, இன்று உலகம் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினைகள், பெரிய சிரமங்கள், வேலை இழப்பு, வேலையின்மை, குற்ற நிகழ்வுகள், திருட்டு மற்றும் கற்பழிப்புகள் போன்றவற்றைப் பற்றி எனக்கு வெளிப்பாடுகள் மூலம் தெரிவித்தீருக்கிறாய். போதைப் பொருட்களுக்காக செலவழிக்கவும், அதிகமான செல்வங்களை சேர்க்கவும் இளைஞர்கள் தங்கள் பெற்றோர்களைக் கொலை செய்வார்கள். எல்லா வகையான

பேரழிவுகளும் நிகழும். அதிகாரத்திற்கான போர்கள் காரணமாக நீர் ஆறுகள் போல பூமியில் இரத்தம் சிந்தப்படும். உணவு மற்றும் பானத்தின் பற்றாக்குறையால் பல நாடுகளிலும் மக்கள் இறப்பார்கள். போதுமான மருந்துவகைகள் சந்தையில் கிடைக்காத காரணமாக நோய்வாய்ப்பட்ட பல மக்களும் தங்கள் உயிரை இழக்க நேரிடும். கள்ள சந்தையில் மருந்துவகைகளின் விற்பனை அதிகரிக்கும். பெரிய நாடுகள், சிறிய மற்றும் பலவினமான நாடுகளைத் தாக்கும். பிற வைரஸ்கள் உருவாகும். அதிலொன்று மனிதர்கள் மற்றும் விலங்குகளைத் தாக்கும் வைரஸாகும். மற்றொன்று சிறு குழந்தைகளை தாக்கும். இஸ்லத்தின் எதிரிகளும், இஸ்லாத்திற்கு எதிரான அரசாங்கங்களும், இஸ்லாமிய நாடுகள் மற்றும் முஸ்லீம்களை தங்கள் இலக்குகளாக மாற்றுவார்கள். மேலும் அவர்களை துன்புறுத்தி, சித்திரவதை செய்வார்கள். ஆயிரக்கணக்கானோர்களின் இறப்புக்கு காரணமாக பெரிய பூகம்பங்கள் நிகழும். விமான மற்றும் கப்பல் விபத்துக்களும் இருக்கும். அதன் விளைவாக பல உயிர்கள் பறிபோகும். மோசடி, ஊழல், அதிகாரத்திறாக போர், நேர்மையற்ற முறையிலான தேர்தல்கள் போன்றவை நிகழும். இவை அனைத்தையும் நீ எனக்கு வெளிப்படுத்திய போது, தரிசனங்கள் மற்றும் கனவுகள் மூலம் அவை அனைத்தையும் நீ எனக்கு காண்பித்தபோது, இந்த நெருக்கடி மற்றும் சிக்கல்களை எண்ணி என் இதயம் வேதனை அடைகிறது. வரவிருக்கும் இத்தகைய துன்பத்தை எண்ணும் போது, எனது வாழ்க்கையே முடிவுக்கு வரப்போகுவதாக எனக்கு தோன்றுகிறது. எனது ஆற்றலை நான் இழந்து விட்டேன். எனக்கு எந்த வலிமையும் இல்லை இறைவா! பிரபஞ்சத்தின் எஜமானனே! இத்தகைய எல்லா வகையான பேரழிவுகளிலிருந்தும் ஏற்படவிருக்கும் இத்தகைய துயரங்களிலிருந்தும் எங்களை பாதுகாத்துக் கொள்வாயாக!

என் இறைவா! வரவிருக்கும் இத்தகைய நிகழ்வுகளால் பூமியில் ஆண்களின் எண்ணிக்கை குறையும் என்பதையும் நீ எனக்கு காட்டினாய். அந்நிலையில் பெண்கள் மற்றும் சிறுமிகள் அதிகமாக இருப்பார்கள் என்றும் அவர்களின் மரியாதை மற்றும் கௌரவத்தை எவ்வாறு பாதுகாப்பது என்பதை நீ எனக்கு கற்றுக் கொடுத்தாய்.

உன் உதவியின்றி, இது எங்களுக்கு மிக கடினமான ஒரு நெருக்கடியாக அமையும். அல்லாஹ்வே! இப்போது மக்கள் புள்ளிவிவரப்படி பார்த்தால் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இருப்பதாக காட்டுகின்றன.

என் இறைவா, வரவிருக்கும் பெரிய விபத்து - மூன்றாம் உலகப்போர் எவ்வாறு வன்முறையாக இருக்கும் என்பதை நீ நன்கு அறிபவனாக இருக்கின்றாய்.

எனவே, வழிவகைகள் உள்ளவர்கள், தேவையான பொருட்களை சேமித்து கொள்ளட்டும் ஏனெனில் இந்த யூத்தத்தின் மூலம், அடிப்படைய பொருட் கிடைக்காது. காரணம் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் பொருள் வகைகளை எடுத்து செல்ல முடியாத நிலை உருவாகும். எனவே, உணவு மற்றும் அடிப்படை பொருட்களை நீங்கள் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறேயானால், கடினமாக காலங்களில் நீங்கள் இல்லாதவர்களுக்கு உதவவும், வழங்கவும் முடியும. அதிகமாக ஆண்கள் இறந்து விடுவார்கள். இதனால் ஏராளமான விதவைகள் மற்றும் அனாதைக் குழந்தைகள் இருப்பார்கள்.

அல்லாஹ்வே! இந்த நூற்றாண்டு அத்தகைய ஒரு நூற்றாண்டு என்பதையும், அதன் ஆரம்பம் துன்பாக இருக்கும், அது இறுதிவரை தொடரும் என்பதையும் நீ எனக்கு காட்டினாய். பொதுவாக மனித குலத்திற்கு இந்த நூற்றாண்டு கடினமாக இருக்கும்.

அல்லாஹ்வே! நான் சொல்வதை இந்த உலகிலுள்ள எத்தனை பேர் நம்புவார்கள்? எத்தனை பேர் இந்தச் செய்திளைப் புறக்கணித்துக் விடுவார்கள்?

அல்லாஹ்வே! சில விஷயங்களைச் செய்ய எனக்கு அனுமதி வழங்கியிருப்பது உண்மைதான், ஆனால் எத்தனைபேர் (நான் என்ன செய்வேன் என்று) என்னை நம்புவார்கள். எத்தனை பேர் என்னை அவமானப்படுத்தவும், என் மீது குற்றம் சாட்டவும் செய்வார்கள்?

என் இறைவா! என் பிரர்த்தனைகளை ஏற்றுக் கொள்வதை அதிகரித்து, உன் அருட்களை என் மீது பொழிந்து, என்னையும் என்னுடன் இருக்கும் அனைவரையும் இந்த துன்பம் மற்றும் துயரத்திலிருந்து காப்பாற்றுவாயாக.

அல்லாஹ்வே, என் மீது நீ சுமத்திய மாபெரும் பணியில் நீ எனக்கு உதவி புரிவாயாக, எனக்கு கஷ்டங்களை அளித்து விடாதே.

அல்லாஹ்வே! என்னை உன்னிடம் முழுமையாக சமர்ப்பித்துக் கொண்டவனாக என்னை மாற்றுவாயாக! அதற்கு நான் உன்னிடம் மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். அடக்கமும் வெட்கமும் இருப்பதால் என் நாவால் வெளிப்படுத்த

முடியாததையும் நீ எனக்கு வழங்குவாயாக! அல்லாஹ்வே! உன் சக்தியால் முடியாததாக எதுவும் இல்லை.

எனது இறைவா! அனைத்து வகையான அசுத்தங்களிலிருந்தும் மற்றவர்களின் அடிமைத்தனத்திலிருந்தும் என்னுடன் இருக்கும் அனைவரையும் நீ காப்பாற்றுவாயாக.

எனது இறைவா! என் தோழர்கள் அனைவரையும் எல்லா நேரத்திலும் மகிழ்ச்சியாக வாழவைக்கவும், தவறான வாழ்கையிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும் செய்வாயாக. மேலும் அவர்கள் அனைவரையும் நான் சொல்வதைக் கேட்டு, மார்க்க பணிகளை மேற்கொள்ள என்னுடன் ஒத்துழைக்கவும் வைப்பாயாக!

எனது இறைவா! அவர்களது வீடுகளை தஜ்ஜாலிடமிருந்து காப்பாற்றுவாயாக! எல்லா வகையான வேதனையிலிருந்தும் அவர்களை பாதுகாப்பாயாக! அவர்களை கஷ்டப்படுத்த வேண்டாம். அந்த மணிநேரம் வரக்கூடாது என்று பிரார்த்தனை செய்யுங்கள். அவர்கள் உங்க்ள பாதையை, நீ அமைத்த அந்த பாதையை ஒரு போதும் விட்டுவிடாமல் உறுதியுடன் நிலைத்திருக்க வழிவகுப்பாயாக! என்ன நடந்தாலும் அவற்றை எப்போதும் உனது பாதையில் சீராக வைத்து, எப்போதும் இந்த இறைவழியில் நிலைத்திருக்கும்படி அவர்களை மாற்றிவிடுவாயாக!

என் இறைவா! நீ படைத்த இந்த உலகில் மக்களுக்கு பஞ்சமில்லை என்றிருந்தபோதிலும், நீ அவர்களை தேர்ந்தெடுத்து நேரடியாக உன்னிடம் அழைத்து வரும் இந்த படகில் அமர வைத்தாய் என்பதை அவர்கள் போதுமானதாகக் கருத்தில் கொள்ளாமல் இருக்கலாம். இந்த நூற்றாண்டில் நீ செய்த மாபெரும் அருட்களுக்கு அவர்கள் எந்த நன்றியையும் காட்டவில்லை என்றால், அதன் முக்கியத்துவம் மற்றும் அவை மற்றவற்றிலிருந்து எவ்வாறு வேறுபட்டதாக இருக்கிறது என்பதும் அவர்களுக்கு தெரியாவிட்டால், அல்லாஹ்வே! நீ எதுவொன்றையும் செய்வதற்கான ஆற்றலைப் பெற்றவனாக இருக்கின்றான் என்று எனக்கு தெரியும். இந்த அருட்கொடைகளை அவர்களிடமிருந்து நீ பறித்து, அவர்களுக்கு பதிலாக தாழ்மையான மற்றும் நன்றியுள்ளவர்களை அவ்விடத்தில் கொண்டு வரவும் உனக்கு முடியும். மேலும் அத்தகைய பக்த அடியார்கள், இறைவனிடமிருந்து வந்த இந்த தூதுச் செய்தியை உலகின் நான்கு மூலைகளிலும் பரப்புவதற்காக தாங்கள் வாழ்கையையும், கௌரவத்தையும், செல்வத்தையும்

தியாகம் செய்வார்கள், தங்கள் இரவுகளைக் கூட இறைமார்க்க பணிகளுக்காக ஒதுக்கி வைப்பார்கள்.

அல்லாஹ்வே! நான் உன் மீது வைத்திருக்கும் நம்பிக்கை இது தான். என் பகைவர்களை ஏமாறிய நீ மிக தூய்மையானவன்.

அல்லாஹ்வே! நிச்சயமாக, நீ எனக்கு மிக பெரிய உதவிகள் புரிந்திருக்கின்றாய்! எனது அரசனே, நான் எவ்வாறு உனக்கு நன்றி சொல்ல முடியும். என் இறைவா! நீ எல்லா நேரங்களிலும் என்னுடன் இருந்தாய், என் உடலின் ஒவ்வொரு பகுதியையும் நான் உன் வழியில் சமர்பித்திருக்கின்றேன். என் தலை முதல் கால் வரை உன் அருள் மற்றும் பேருதவிகள் மட்டுமே, வானத்திலிருந்து உன் அருட்கொடைகளை மழைப் போல் என் மீது நீ பொழிகிறாய். நீ எனக்கு மிக அதிகமான உதவி புரிந்து என்னை நீ அரியணையில் அமர வைத்தாய்.

தீன் மற்றும் துனியாவிலும் நீ எனக்கு உதவி புரிந்தாய், உனக்கு நன்றி சொல்ல போதுமான ஒரு நாக்கை நான் எங்கிருந்து பெறமுடியும்? நான் ஒன்றும் அல்ல. என் இறைவா! உனது கருணை மிக பெரியது. உனது கருணையால், எல்ல வகையான கஷ்டங்களிலிருந்தும் என்னை காப்பாற்றவாயாக! என்னையும் என்னுடன் இருக்கும், உன்னை நேர்மையான இதயத்துடன் வலுவாக பற்றிப் பிடித்தவர்களையும் நீ பாதுகாப்பாயாக!

என் அன்பாளனே! என்னுடன் நேர்மையான தொடர்பை வைத்துள்ள அனைவருமே தங்கள் கண்களால் உன் ஒளிரும் முகத்தை பார்க்க நீ வழிவகுப்பாயாக! அவர்களின் சிரமங்களை நீ எனக்கு காட்டாதே, அந்நிலையில் நான் மிகவும வருத்தபப்படுவேன். அவை அனைத்தும் எனக்கு மிகவும் வேதனை அளிக்கும். அவர்களின் பாவங்களை நீ மன்னிப்பாயாக! அவர்கள் கீழ்ப்படியாமையும் நீ மன்னிப்பாயாக! இந்த தற்காலிக உலகின் கிருமிகளாகாமல் இருக்க அவர்கள் மீது உன் அருளைப் பொழிவாயாக! அவர்கள் ஒவ்வொருவரும் உனக்கு கீழ்ப்படிந்தவர்கள் என்று அறியப்படட்டும். நான் வைத்திருக்கும் இந்த விருப்பத்தை நானே நிறைவேற்ற முடியாது. எல்லாம் உன்னிடமிருந்து வரும்போதுதான் இது சாத்தியமாகும். வானமும் பூமியும் உனக்கு சொந்தமானது, எல்லாவற்றையும் நீ ஆளுபவனாக இருக்கின்றாய். !

என் இறைவா! முன்பு எனக்கு இருந்த பொறுமையை இப்போது நான் இழந்திருக்கிறேன். அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வே, உன் பெயர் ரஹ்மான் ஆகும். எனவே எல்லா வகையான சிக்கல்களிலிருந்தும் நீ என்னை காப்பாற்றுவாயா!

என் எஜமானனே, எல்லா விதமான சோதனைகள், துன்பங்கள் மற்றும் நோய்களிலிருந்து எல்லா நேரங்களிலும் என்னை பாதுகாப்பாயாக! எனக்கு பலம், ஆற்றல் மற்றும் வாழ்க்கையை வழங்குவாயாக! அவ்வாறேயானால், என் நேரம் (நான் உன்னடம் திரும்பி வரும் நேரம்) வரும் வரையில் உன் மார்க்கத்திற்கு சேவை புரிய எனக்கு முடியும்.

அல்லாஹ்வே, உனது கட்டளைதான் எல்லா இடங்களிலும் ஆட்சி செய்கிறது. இந்த உயிரும், நேரமும் உன்னுடையது.

அல்லாஹ்வே, எல்லா அசுத்தங்களையும் என்னிடமிருந்து நீக்குவாயாக! எல்லா தூய்மையற்ற நடைமுறைகளிலிருந்தும் என்னை நீ விலக்கி வைப்பாயாக!

தெய்வீக அடையாளங்களால் எனக்கு வலிமை, தைரியம் மற்றும உறுதியைக் கொடுப்பாயாக! உனது ஆதரவின் மூலம் என்னை பக்தியுடன் வழி நடத்துவாயாக! நீயே ஏழைகளின் கண்களுக்கு குளிராக இருக்கின்றாய்.

அல்லாஹ்வே! எனக்கு நேர்மையை வழங்குவாயாக! நேர்மையின் பின்னணியால் என் மார்பை விரிவுபடுத்துவாயாக! பயப்படுபவர்களுக்கு அடைக்கலம் வழங்குபவனே! உன் கட்டளைகளை கடைப்பிடித்து வாழ எனக்கு ஆற்றலை கொடுப்பாயாக! உனது தாராள மனப்பாண்மையால் எனக்கு ஆதரவை வழங்குவாயாக! இதனால் உன்னிடம் நன்றியுள்ளவனாகவும், எப்போதும் நன்றி சொல்பவனாகவும் எனக்கு இருக்க முடியும். ஒருபோதும் என்னை நன்றியற்றவனாக மாற்றிவிடாதே, என்னை உன் பாதுகாப்பிலும் உன் அடைக்கலத்திலும் வைத்திருப்பாயாக.

அல்லாஹ்வே! உன்னிடமிருந்துள்ள உதவியை எனக்கு வழங்குவாயாக, இதனால் அனாதைகளிடம் கருணை காட்டவும், எனது வழிமுறைகளுக்குள் நின்று அவர்களுக்கு உதவவும் முடியும். பசியுள்ளவர்களுடன் தாராளமனப்பாண்மையை

காட்டவும், எல்லா இடங்களிலும் அமைதியை நிலைநாட்டவும், நல்லிணக்கத்திலும் அமைதியிலும் அவர்களை வாழ வைக்கவும் எனக்கு வாய்ப்பளிப்பாயாக!

அல்லாஹ்வே! உன் மாபெரும் கருணையின் ஒரு பகுதியை எனக்காக நீ ஒதுக்குவாயாக! உனது பிரகாசமான அடையாளங்களுடன் என்னை வழி நடத்துவாயாக! உனது மிகுந்த திருப்திக்கு என்னை ஆளாக்குவாயாக! நீ தேர்ந்தெடுத்த அடியார்களிடம் நீ காட்டும் அன்பை என்னிடமும் காட்டுவாயாக!

இந்த துஆவுடன் இன்றைய பேருரையை நான் முடித்துக் கொள்கிறேன்.

**அல்லாஹ்வே, நான் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறேன. அந்த சொர்க்கத்தின்பால் என்னை அழைத்துச் செல்லும் சொற்களும் செயல்களும் வழங்கி எனக்கு அருள்புரிய நான் உன்னிடம் மன்றாடுகிறேன். நரகத்தலிருந்து என்னை பாதுகாக்கும்படி நான் உன்னிடம் கேட்கிறேன். அந்த நரகத்தின்பால் அழைத்து செல்லும் சொற்களிலிருந்தும் செயல்களிலிருந்தும் என்னை பாதுகாத்துக் கொள்ளும்படி நான் உன்னிடம் மன்றாடுகிறேன். நீ என்ன முடிவு செய்தாலும் அது எனக்கு நன்மையாக அமைத்துக் கொள்வாயாக! ஆமீன் சும்ம ஆமீன்.**

இன்ஷா அல்லாஹ், அடுத்த வாரமும் துஆக்கள் என்ற விஷயத்தில் எனது பேருரையைத் தொடர அல்லாஹ் எனக்கு தௌபீக் வழங்கட்டும்.

ஈதுல் அத்ஹாவின் பகுதியாக, உலகெங்கிலுமுள்ள எனது முஸ்லீம் சகோதரர்கள் சகோதரிகள், குழந்தைகள் மற்றும் என்னை பின் பற்றும் எனது அனைத்து தோழர்களுக்கும் ஈதுல் அத்ஹா முபாரக் தெரிவித்துக் கொள்கிறேன்.

குர்பானிக்காக, கோம்ரோஸ் மற்றும் மடகாஸ்கரிலுள்ள சகோதரர்கள் அவர்களால் முந்தவரை தங்கள் பணத்தை அனுப்பி வைத்தனர். அல்ஹம்து லில்லாஹ்! அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கோம்ரோஸ் மற்றும மடகாஸ்கரிலுள்ள சகோதரர்கள் எனக்கு போண் செய்து, அனைவருக்கும் நன்றி தெரிவிக்கவும் அவர்களுக்காக துஆ செய்யவும் கூறினார்கள்.

உங்கள் எல்லா தியாகங்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக! அவனது மார்க்கத்தில் சேவை புரிவதற்கு நல்ல ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளைக் வழங்குவாயாக! அதை போலவே, ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை),

ஹஸ்ரத் இஸ்மாயீல் நபி (அலை) மற்றும் ஹஸ்ரத் ஹாஜர (ரலி) அவர்களுடையவும் தியாக மனநிலையை பெற அல்லாஹ் நம் ஒவ்வொருவருக்கும் உதவட்டும் இன்ஷா அல்லாஹ்! நாளை, 1 ஆகஸ்ட் 2020, எனது ஈதுல் அத்ஹா பேருரையின்போது இந்த விஷயத்தில் உங்களிடத்தில் நான் உரையாற்றுவேன்.

**ஈதுல் அத்ஹா முபாரஹ்**

**TRANSLATED BY:**

**AZIM AHMAD**


**EDITING & PUBLISHING ARE DONE BY**

***AMIR***

***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***

**TAMIL NADU**

**Ph No: 917502272774**